**ஓய்வூதிய சுற்றறிக்கை இல: 01/2017**

எனது இல:ஓதி/சுற்றறிக்கை/01/2017,
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
09 .06.2017

அனைத்து மாவட்ட செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்.

முப்படையில் ஊனமுற்ற அலுவலர்கள் மற்றும் விதவைகளுக்கான ரணவிரு சுரக்கும் படி கொடுப்பனவு உரிமம்

அமைச்சரவை பத்திர அப/16/0817/703/037-I ஆம் இல, 2016.12.13 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் "ரணவிரு சுரக்கும் படிக்கான" உரிமம் தொடர்பில் கீழே தரப்பட்டவாறு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

I. அப/1982/305 / (9) அம் இலக்க, 1982.07.21 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களின் அடிப்படையில், முப்படைகளில் சேவையாற்றி பயங்கரவாத நடவடிக்கைகளின் போது ஊனமுற்ற 55 வயது வரை சம்பளம் மற்றும் படிகளை பெறும் அலுவலர்களுக்கு,
II. மேற்கூறப்பட்ட (I) சம்பளங்கள் மற்றும் படிகளைப் பெற்றுக்கொண்டிருக்கும் திருமணமான போர் வீரர்களின் மரணத்திற்குப் பின்னர் அவர்களின் விதவைகளுக்கு,
III. சேவையில் இருந்தபோது பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக இறந்த போர் வீரர்களின் அப/1982/305 / (9) ஆம் இலக்க, 1982.07.21 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் பயன் பெறும் விதவைகளுக்கு,

02. "ரணவிரு சுரக்கும் படி" கணக்கிடும் போது 55 வயதில் உள்ள அடிப்படை சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கணிப்பிடுதலின் அடிப்படையிலான கொடுப்பனவுகள் ஆகியவை மட்டுமே கருத்தில் கொள்ளப்படவேண்டும். மேற்கூறிய கணக்கிடப்பட்ட சம்பளத்திலிருந்து ஓய்வூதியம் 85% மற்றும் ரணவிரு சுரக்கும் படித்தொகை 15% ஆகியவை தனித்தனியாக கணக்கிடப்படுவதற்கு தாங்கள் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

03. ஓய்வூதியத்துடன் நிலையான படியாக இப்படி தனியாக செலுத்தப்பட வேண்டும். இப்படி 55 வயதைக் கடந்த ஒருவரது ஓய்வூதிய மீளாய்வில் திருத்தப்படக்கூடாது. இருந்தபோதும், இப்படி சம்பள மீளாய்வில் பொறுப்பு வாய்ந்த அலுவலரால் திருத்தப்பட வேண்டும்.

04. "ரணவிரு சுரக்கும் படி" உச்சப் பெறுமதி 15% க்குள் இருக்க வேண்டும் அத்துடன் ஓய்வூதிய கணிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு ஓய்வூதியர்களுக்குமான படித்தொகைகள் மற்றும் அடிப்படை சம்பளத்தின் மொத்த பெறுமானம் 100% ஐ விட அதிகமாக இருத்தல்கூடாது.

05. பணிக்கொடை கொடுப்பனவு மற்றும் ஊனமுற்றோருக்கான ஓய்வூதியம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளும் போது முன்னர் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் தொடர்ந்தும் அவ்வாறே வலுவிலிருக்கும்.

06. ஓய்வூதிய சுற்றறிக்கை 13/2010 இன்பிரகாரம் 50% ஓய்வூதியம் பெற உரித்துடைய ஓய்வூதியர் இக்கொடுப்பனவைப் பெற உரிமை அற்றவராவார்.

07. "ரணவிரு சுரக்கும் படி" கொடுப்பனவு 2017.01.01 ஆம் திகதி முதல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

08. இச்சுற்றறிக்கையானது பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் ஒப்புதலுடன் வெளியிடப்பட்டுள்ளது.

**ஒப்பம்.**
**ஏ. ஜகத். டி டயஸ்.**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.

பிரதிகள்:

| | | |
|---|---|---|
| 1. | ஜனாதிபதி செயலாளர் | – த.த.த |
| 2. | பிரதமரின் செயலாளர் | – த.த.த |
| 3. | செயலாளர் - பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு | – த.த.த |
| 4. | செயலாளர் - உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | – த.த.த |
| 5. | செயலாளர் - நிதி அமைச்சு | – த.த.த |
| 6. | செயலாளர் - பாதுகாப்பு அமைச்சு | – முப்படையினருக்கும் தேவையேற்படின் மேலும் அறிவுறுத்தல்களை வழங்குதற்பொருட்டு |
| 7. | முப்படைத் தளபதிகள் | – உ.ந.எ. |
| 8. | கணக்காய்வாளர் நாயகம். | – த.த.த |